புதுப் பல்கலைக்கழகம் வேண்டாம் என்பதுதான். ஆனால் சில மாநிலங்களில் அதிகமாக இருக்கும். சில இடங்களில் 'மஷ்ரூம்' (mushroom) யுனிவர்சிட்டி என்று சொல்கிறார்கள். நம் மாநிலத்தில் பல்கலைக்கழகம் ரொம்ப குறைவு. அதைத் தான் நான் மத்திய கல்வி அமைச்சருக்கும் யுனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷனுக்கும் சொல்லி வந்தது. இங்கே ஜனத்தொகைப்படி பார்த்தால்—ஒரு கோடிக்கு ஒரு பல்கலைக்கழகம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது—நமக்கு 1½ தான் என்று சொல்லலாம். இங்கே மூன்றுக்கு குறையாமல் இருக்கவேண்டியதற்கு 1½ தான் இருக்கிறது. ஆகவே மதுரைப் பல்கலைக்கழகம் வேண்டும் என்பதை யுனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன் தலைவருக்குச் சொன்னோம். மற்றவர்களுக்கும் சொன்னோம். அவர்களும் மதுரைப் பல்கலைக்கழகம் அவசியம் வேண்டியது தான் என்று கொஞ்சம் கூடத் தயங்காமல் ஏற்றுக் கொண்டார்கள். ஒரு வாரத்துக்கு முன்பு சென்ட்ரல் அட்வைசரி போர்ட் ஆஃப் எஜுகேஷன் கூட்டத்தில் இனிப் பல்கலைக் கழகம் கிடையாது; இருப்பதை சிறப்பிக்க வேண்டும், பலப்படுத்த வேண்டும், நான்காவது திட்டத்தில் பல்கலைக்கழகம் வைக்க இடமில்லை என்று சொல்லி வந்தவர்கள் கூட ஒப்புக்கொண்டார்கள், ஒரு அங்கத்தினர் "மதுரைப் பல்கலைக்கழகம் மட்டும் ஏன்?" என்று கேட்டவுடன், அதற்கு விதிவிலக்கு என்று தயங்காமல் சொல்லி விட்டார். மதுரைப் பல்கலைக்கழகத்தை நாம் மட்டும் வரவேற்கவில்லை. வெளியே இருப்பவர்களும் மிகுந்த நம்பிக்கையோடு வரவேற்கிறார்கள். இப்போது கடைசியில் பேசிய ஸ்ரீ பாலசுப்ரமணிய அய்யர் அவர்கள் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்கள்—மதுரை என்றாலே தமிழ் என்று பொருள் என்பதாகக் கூறினார்கள். மதுரையிலே பல்கலைக் கழகம் சிறந்த ஒரு பல்கலைக்கழகமாக விளங்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்கள். அதையொட்டித் தான் சில சிறப்புகள்—சிறப்பு அம்சங்கள்—ஏற்பட வேண்டுமென்று ஸ்ரீ பாலசுப்ரமணிய அய்யர் கமிட்டியில் சிபாரிசு செய்ததைக் குறிப்பிட்டார்கள். பல்கலைக் கழகம் என்பது பல்கலைக் கழகமாகத்தான் இருக்க வேண்டும். அதில் மற்றொரு அம்சத்தை ஸ்ரீ பாலசுப்ரமணிய அய்யர் விளக்கினார். அதை "யூனிட்டரி யுனிவர்சிட்டி"யாக வைத்தால் நல்லது என்று கருத்து தெரிவிக்கப்பட்டது என்று. அதிலே "டீச்சிங்"கும் Teaching இருக்கவேண்டும். 'அஃபிலியேட்டம்' (affiliated) இருக்க வேண்டும். இரண்டும் இருந்தால் தான் அது நல்ல பல்கலைக்கழகமாக இருக்கும். அதுவும் இப்போது நான்கு மாவட்டங்களை சேர்த்திருக்கிறோம். அது பல்கலைக்கழகம் என்றாலும் பொருத்தமான பல்கலைக்கழகமாக இருக்க வேண்டுமே தவிர, இங்கே நாம் "யூனிட்டரி" 'அது, இது' என்று கூறி, மறுபடி இன்னொரு பல்கலைக்கழகத்தில் இணைப்பது என்பதெல்லாம் திருப்திகரமானதல்ல அரசாங்கம் அதை ஏற்றுக் கொண்டு தான் "Teaching-cum-affiliated University" யாக அமைத்திருக்கிறது. இந்தப் பல்கலைக்கழகத்தில் பாலசுப்ரமணிய அய்யர் கமிட்டி சிபாரிசு செய்திருப்பது போல் சில சிறப்புகள் இருக்க வேண்டும் என்பதை நான் முற்றிலும் ஏற்றுக்கொள்கிறேன் அதில் முதலிடம் தமிழுக்கு வேண்டும் என்றார்கள். 'தமிழ், தமிழ்' என்று வெறும்

[திரு. எம். பக்தவத்சலம்] [10th November 1965

போர்டு எழுதிவிட்டால் மட்டும் போதாது. நாம் விரும்புவதெல்லாம் தமிழிலே ஆராய்ச்சி—ஆங்கிலத்தை எடுத்துக் கொண்டால் எவ்வளவு ஆராய்ச்சி இருக்கிறது? மூன்று நாட்களுக்கு முன்பு ஒரு இளம் பெண்மணி என்னிடம் பேசிக் கொண்டிருந்தார். "என் கணவர் அமெரிக்காவில் ஆராய்ச்சி செய்கிறார்" என்று சொன்னார். "நீ என்ன செய்கிறாய்?" என்று கேட்டேன். 'மொழி ஆராய்ச்சி ஆங்கிலத்தில் செய்கிறேன். பி.ஹெச்.டி.-க்கு (Ph. D.) என்று சொன்னார். நான் ஆங்கிலத்தை வெறுப்பவன் அல்ல. ஆங்கிலத்தில் எவ்வளவோ ஆராய்ச்சி வேண்டும் என்று உணருகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டத் தான் சொன்னேன். அப்படி தமிழிலும் ஆராய்ச்சி செய்யும் மனப்பான்மை வரவேண்டும். மாணவர்கள் கூட 'தமிழ்' என்று மேடையில் பேசிவிட்டால் ஆத்ம திருப்தியடைந்து தமிழுக்கு தொண்டு செய்துவிட்டோம் என்று நினைக்கிறார்கள். தமிழில் எவ்வளவு ஆராய்ச்சி செய்ய வேண்டி இருக்கிறது? இதையெல்லாம் பல்கலைக்கழகம் செய்யவில்லை என்றால் வேறு யார் செய்வார்கள்? சென்னைப் பல்கலைக்கழகம் சிறந்த ஆராய்ச்சி செய்கிறது. வெளியே என்ன செய்கிறார்கள்? தமிழிலே 'அ—ஆ' வன்னாவா கற்றுத் தருகிறார்கள்? மாஸ்கோ யுனிவர்சிட்டியில் தமிழுக்கு "சேர்" (Chair) தனித்துறை இருக்கிறது. ஆக்ஸ்போர்டில் இருக்கிறது என்று நினைக்கிறேன். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் செய்கிறார்கள். ஓரளவு தான் எடுத்துச் செய்கிறார்கள் என்று சொல்லுவேனே தவிர, நாம் எவ்வளவு விரும்புகிறோமோ அந்த அளவுக்கு வரவில்லை. மதுரையில் இது ஒரு சிறப்பு அம்சமாக இருக்க வேண்டும். தமிழ் இலக்கிய ஆராய்ச்சி முக்கியமானது. அதிலிருந்து வரலாறு எவ்வளவோ இருக்கிறது. இதையெல்லாம் "ஸ்பெஷலைஸ்" Specialize பண்ணித் தான் வரலாற்றுக்கு ஏற்ற வகையில் விளக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அது மட்டும் போதாது, இப்போது இது விஞ்ஞான உலகம். சில விசேஷ விஞ்ஞான ஆராய்ச்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும். ஸ்ரீ பாலசுப்ரமணிய அய்யர் "கெமிஸ்டிரி" (Chemistry) "ஜியாலஜி" (Geology) எல்லாம் சொன்னார்கள்.—இது மாதிரி 2, 3 முக்கியமானதை எடுத்துக் கொள்ள வேண்டும். என்னுடைய அவாவெல்லாம் உலகத்திலுள்ள யுனிவர்சிட்டி எல்லாம் "மதுரை யுனிவர்சிட்டியைக் கேட்டால் இதற்கு விளக்கம் கிடைக்கும்" என்று இங்கே நாடி வரவேண்டும். அந்த அளவு நம் பல்கலைக்கழகம் வளர வேண்டும். படிப்பும் ஆராய்ச்சியும் பெருக வேண்டும். அம்மாதிரி எடுத்துக் காட்டான வகையில் மதுரைப் பல்கலைக்கழகத்தில் மக்கள் என்ன எதிர்பார்க்கிறார்களோ அவ்வாறெல்லாம்—மதுரையைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல—வெளியே இருப்பவர்கள் என்ன எதிர்பார்க்கிறார்களோ அதற்கேற்ற வகையில் மதுரை பல்கலைக்கழகம் விளங்கவேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

சில கருத்துக்கள் சொன்னார்கள். அதெல்லாம் மேற்கொண்டு பல்கலைக்கழகம் அமைக்கப்பட்ட பிறகு அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டிய விஷயம். டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்கள், திரு.

10th November 1965] *[திரு. எம். பக்தவத்சலம்]*

அன்பழகன் மற்றவர்கள் எல்லாம் எடுத்துக் கூறினர்கள்—" இன்று வித்வான் டைடிலுக்கு ஏன் ' டிகிரி ' கொடுக்கக் கூடாது ? ". அது என்ன குறைவு? என்று. யார் கொடுப்பது? அவர்களுக்கு டிகிரி கொடு என்று யார் சொல்வது? அவர்கள் படித்து வித்வான் பட்டம் பெற்றிருக்கிறார்கள். அவர்களை அதிலே சேர்த்துக் கொள் என்று சொல்வதை, மதுரைப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்ட பிறகு அவர்கள் பார்த்து அதை 'டிகிரி' ஆக்கலாம் அல்லது சர்க்கார் ' டெஸ்ட் ' வைக்க வேண்டும் என்று அவர்கள் பார்த்து—அந்த மதுரை பல்கலைக்கழகம் பார்த்து முடிவு செய்யவேண்டும். " டிகிரி ஹோல்டர்ஸ் 'க்கு, பட்டம் பெற்றவர்களுக்கு உரிமை இருந்தால் இவர்களுக்கும் அந்த உரிமை கொடுங்கள் என்று கேட்பதை விட, அவர்களுடைய படிப்பு, தேர்ச்சி, பக்குவத்தை எடுத்துக் கொண்டு, இவர்களுக்கு எப்படி 'டிகிரி' கொடுப்பது என்பதை, பின்னாலே பல்கலைக்கழகம் அமைக்கப்பட்ட பிறகு, அவர்கள் கவனிப்பது நலமாக இருக்கும். இப்போது சில திருத்தங்கள் எல்லாம் வந்திருக்கின்றன. திருத்தங்களைப்பற்றி மறுபடியும் விளக்குவோம். ஆனால் இதெல்லாம் பொறுக்கு கமிட்டியில் சிறந்த முறையில் விவாதிக்கப்பட்டு—நன்றாக விவாதிக்கப்பட்டுத்தான் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

அதே மாதிரி தமிழ்ச் சங்கத்தைப் பற்றி நேற்றே குறிப்பிட்டேன். தமிழ்ச் சங்கம் முதல், இடை, கடைச் சங்கம் என்றெல்லாம் இருந்த பரம்பரையில் இருக்கிறது. தமிழ்ச் சங்கத்திலிருந்து பல்கலைக்கழகம் வந்தது என்று சொல்வேன், அதுவும் நவீன முறையில். பரமசிவனே தலைமை வகித்த சங்கமாக இருந்தாலும் அது போதாது என்று சொல்வேன். உறுப்பினர்களும் ஒப்புக் கொள்வார்கள். இன்றைக்கு உலகத்தில் எத்தகைய அற்புதமான முன்னேற்றம் இருக்கிறது ? அதற்கெல்லாம் வசதி அளிக்கும் முறையில், அறிவைப் பெருக்கும் முறையில் நம் மதுரை பல்கலைக்கழகம் இருக்க வேண்டும். " ஃபௌண்டேஷன் (Foundation) ஆக முதலில் தமிழை எடுத்துக் கொள்ள வேண்டும். தமிழ்ச் சங்கம் என்று பெயர் வைத்துக் கொண்டு " எனக்கு ஒரு சீட் (Seat) கொடு " என்று கேட்பது அந்த தமிழ்ச் சங்கத்தின் கௌரவத்துக்கு உகந்ததல்ல. அந்த கௌரவம் பாதிக்கப்பட நான் இடம் கொடுக்க மாட்டேன். பொறுக்கு கமிட்டியில் விவாதிக்கப்படுகையில் இந்தப் பேச்சு வந்தது. தமிழைப் பற்றி அலட்சிய மனப்பான்மையால் இந்த யோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை என்று யாரும் சொல்ல முடியாது. லோகல் பாடீஸ் (Local bodies) , நேற்று வந்த பஞ்சாயத்து யூனியன் (ராஜாராம் கோபித்துக் கொள்ளக் கூடாது) முனிசிபாலிட்டி இதற்கெல்லாம் பல்கலைக்கழகத்தில் இடம் கொடுக்கவேண்டும்—புரிந்துகொள்கிறேன். ஸ்தல ஸ்தாபனங்கள், மக்கள் பிரதிநிதிகளுக்கு பணி செய்ய வாய்ப்பு கொடுக்க வேண்டும். கொடுத்தோம். இதற்கெல்லாம் கொடுத்து விட்டு இங்கே தமிழ்ச் சங்கத்துக்கு 4 சீட் கேட்டு, இல்லை என்றால், அதனால் தமிழ்ச் சங்கம் புறக்கணிக்கப்படுகிறது என்று யாரும் எடுத்துக் கொள்ளக் கூடாது. மதுரைப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டு அது வளர்ந்த பிறகு மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு ஒரு சிறந்த எதிர் காலம் இருக்கிறது என்று சொல்லலாம்.

4-00 p.m.

[திரு. எம். பக்தவத்சலம்] [10th November 1965

ஃபைனான்ஸ் கமிட்டி பற்றிக் குறிப்பிடப்பட்டது. ஸெனட் என்பது ஒரு 'ஸாவரின் பாடி' என்று சொல்லக்கூடும். யுனிவர்சிடி என்றால் அதன் அங்கம் என்ன? சான்ஸலர், வைஸ்-சான்ஸலர், ஸெனேட், சிண்டிகேட் எல்லாம் சேர்ந்திருப்பது யுனிவர்சிடி. ஃபைனான்ஸ் கமிட்டி வருவதால் யாருடைய அதிகாரமாவது பாதிக்கப்படுகிறது என்று நினைப்பது சரியல்ல. பல்கலைக்கழகத்திற்கு அரசாங்கம் மானியம் கொடுக்க வேண்டியிருக்கும், மானியத்தை அதிகப்படுத்த வேண்டியிருக்கும். அரசாங்கம் காரணங்களைக் கண்டு திருப்திப்பட்டால் மானியம் கொடுக்கலாம். ஸெனேட் அதற்குத் தீர்மானம் போடலாம். 'ஃபீஸ்'-ஐக் கொண்டே ஸெனேட்டையோ யுனிவர்ஸிடியையோ நடத்த முடியாது. பல்கலைக்கழகத்திற்குப் பணம் வேண்டுமானால் அதை இந்த மன்றத்தில் எடுத்துச்சொல்ல வேண்டும். அதை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லுவதற்கு வேண்டிய அதிகாரம் அரசாங்கத்திற்கு வேண்டும். அதனால் தான் ஃபைனான்ஸ் கமிட்டியில் கல்வி இலாகாச் செயலாளருக்கு இடம் கொடுத்திருக்கிறோம். ஸெனேட்டிலும் கல்வி இலாகாச் செயலாளருக்கு இடம் கொடுத்திருக்கிறோம். ஸெனேட்டில் கல்வி இலாகா டைரக்டருக்கும் இடம் கொடுத்திருக்கிறோம். பல்கலைக்கழகத்திற்கு 'ஆடானமி' இருக்க வேண்டியதை நானும் கவனிக்கிறேன். அதன் 'ஆடானமி' பாதிக்கக்கூடாது என்று நானும் கருதுகிறேன். ஆனால் பல்கலைக் கழகம் என்பது ஆகாயத்திலிருந்து வந்துள்ளது போலவும், சில ஏற்பாடுகள் செய்தால் அதனால் அதற்கு தீட்டுப்பட்டுவிடுவது போலவும் நினைக்கக் கூடாது. அது எப்படி வருவது, இது எப்படி வருவது என்று நினைப்பது கூடாது. 'அஃபிலியேடட் காலேஜ், 'அப்ரூவ்ட் காலேஜ்' ஆகியவை பற்றியெல்லாம் பேசப்பட்டது. பி.யூ.ஸி. படிப்பு பற்றி ஸ்ரீ அன்பழகன் கூறினார்: பி.யூ.ஸி. அங்கே வந்தால் தீட்டா?

திரு. க. அன்பழகன்: கனம் அமைச்சர் சொல்வது போல் தீட்டு என்று நான் சொல்லவில்லை. இரண்டு வகையான படிப்புகள் இருக்கின்றன; இரண்டு வகையான மாணவர்கள் இருக்கிறார்கள். ஒருவர் நான்கு ஆண்டுகள் படித்து பட்டம் பெறுபவர், மற்றொருவர் எஸ்.எஸ்.எல்.ஸி.-க்குப் பிறகு ஓராண்டு படிப்பவர். ஆகவே இதுபற்றி விளக்கம் பெற விரும்பினேன். பி.யூ.ஸி. மாணவர் பட்டப்படிப்பு மாணவருக்குப் பக்கத்தில் உட்காரக் கூடாது என்று நான் சொல்லவில்லை.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஒன்று பி.யூ.ஸி. காலேஜ்; மற்றொன்று பட்டம் அளிக்கும் ஸ்தாபனம். இதில் தவறு ஒன்றும் இல்லை. இந்த விஷயம் கூட பொறுக்குக் கமிட்டியில் நன்றாக கவனிக்கப்பட்டது.

வைஸ்-சான்ஸலர் பற்றி ஸ்ரீ அன்பழகன் பேசினார். இந்த விஷயத்தில் 'நாமினேஷன்' அடியோடு புறக்கணிக்கப்படவில்லை. சான்ஸலராக கவர்னரை வைத்திருக்கிறோம். 'எல்லாம் தேர்தல் முறையில் இருக்க வேண்டும், ஜனநாயக முறை வேண்டும்' என்று சொன்னால், ஏன் மூன்று பேரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்? "Vice-Chancellor shall be elected by the Senate"

10th November 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

என்று போடலாமே. ஸெனேட் தேர்ந்தெடுக்கும் மூன்று பேர்களில் ஒருவரை வைஸ்-சான்ஸலராக நியமிப்பதற்கு சான்ஸலருக்கு ஏன் அதிகாரம் கொடுக்க வேண்டும்? தேர்தல் வேண்டும் என்றால், அசல் தேர்தல் வேண்டும். (குறுக்கீடு) இதுவரையில் ஸ்ரீ அன்பழகன் கூட அதைக் கோரவில்லை. சென்னைப் பல்கலைக் கழக ஸெனேட் எப்படி இருந்தாலும், மதுரைப் பல்கலைக் கழக வைஸ்-சான்ஸலரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. எல்லாவற்றையும் தேர்தல் முறைக்குக் கொண்டு வந்தால் 'பாலிடிக்ஸ்' வரும். 'பாலிடிக்ஸ்' என்றால் நாம் சொல்லும் 'பாலிடிக்ஸை' நான் குறிப்பிடவில்லை. சாப்பாட்டில் 'பாலிடிக்ஸ்' வருகிறது; வீட்டில் பாலிடிக்ஸ் வருகிறது. அந்த மாதிரியான 'பாலிடிக்ஸ்' வரும். அது வரக் கூடாது. அது கல்வி ஸ்தாபனங்களில், முக்கியமாக பல்கலைக்கழகத்தில் வரக்கூடாது. தேர்தல் வந்தால், மெஜாரிடி, மைனாரிடி, 'கான்வஸிங்' முதலியவை வரும். இவையெல்லாம் வரக் கூடாது என்பதற்காக உலகிலுள்ள பல பல்கலைக்கழகச் சட்டங்கள் ஆராயப்பட்டன; ஒரு குழு அமைக்கப்பட்டது; பல்கலைக்கழக மானியக் கமிஷனின் தலைவர் அதில் இருந்தார். தகுதியுடையவர்களை வைஸ்-சான்ஸலராகத் தேர்ந்தெடுக்க வேண்டும், அந்த அந்தப் பல்கலைக்கழகம் அதன் ஸ்டேடஸ்-க்குத் தகுந்த வைஸ்-சான்ஸலரை எப்படி நியமிப்பது என்பதை அதுவே வகுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டது. அவ்வாறு விதி வகுக்கப்பட்டது. 'மாடல் யுனிவர்ஸிடி ஆக்ட்'-ல் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று சொல்லப்படவில்லை.

இன்னொரு கருத்து தெரிவிக்கப்பட்டது. அதை டாக்டர் சிதம்பரநாதன் தெரிவித்தார். எனக்குக் கூட அது பிடித்திருந்தது. ஒருவர் இரண்டு முறைக்கு மேல் வைஸ்-சான்ஸலராக இருக்கக் கூடாது என்று ஏன் சொல்ல வேண்டும்? அவ்வாறு ஏன் கட்டுப்பாடு கொண்டுவர வேண்டும் என்று அவர் சொன்னார். இதிலெல்லாம் நாமே ஒரு வரம்பு வைக்கக்கூடாது, இந்த விஷயங்களில் சட்டம் ஏன் குறுக்கே நிற்கவேண்டும் என்பது என் கருத்து. இப்போது அமெரிக்காவில் ப்ரெஸிடெண்ட் தேர்தலை எடுத்துக்கொள்வோம். அங்கேயே ஏன் வரம்பு வைத்திருக்கிறார்கள்? இதை நாம் இன்று நேற்றுப் பார்க்கவில்லை. நேற்று, கீழ் சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஒரு பழைய தமிழ் இலக்கியத்தை எடுத்துக்காட்டினார். தேர்தலில் ஒரு முறை பதவியேற்றவர்கள் தொடர்ந்து அடுத்த முறை தேர்தலுக்கு வரக்கூடாது என்ற கருத்தை தமிழ் இலக்கியத்திலிருந்து அவர் படித்துக் காட்டினார். இவ்வாறு பல கருத்துக்கள் இருக்கின்றன. இதையெல்லாம் ஆராய வேண்டும். வைஸ்-சான்ஸலர் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்படலாம், அதற்கு மேல் தேர்ந்தெடுக்கப் படக்கூடாது என்று வைத்திருக்கிறார்கள். 4-10 p.m.

மற்றபடி வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. பின்னால் திருத்தங்கள் வருகின்றன. திருத்தங்கள் வரும்போது அவசியமானால் விளக்கலாம். மசோதாவைப் பொதுவாக வரவேற்ற அங்கத்தினர்களுக்கு பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டு இதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : The question is—

'That the Madurai University Bill, 1965 (L.A. Bill No. 11 of 1965) as passed by the Assembly be taken into consideration

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2.

MR. CHAIRMAN : The motion is—

'That clause 2 do stand part of the Bill'.

Hon. Members may move the amendments standing in their names, get them seconded and then speak on them.

DR. A. CHIDAMBARANATHAN : Mr. Chairman, Sir, I move the following amendments :—

In clause 2 (a), *for* the words 'for degrees', *substitute* the words 'for degrees, titles and diplomas'.

In clause 2 (*b*), *delete* the words 'the Examinations for titles and diplomas and'.

SRI S. K. SAMBANDHAN : I second the amendments, Sir.

SRI M. RAJAH IYER : Mr. Chairman, Sir, I move the following amendments :—

In clause 2 (*b*), *delete* the words, 'and the Pre-University Examination'.

After sub-clause (*j*), the following new sub-clause (*jj*) be added—

(*jj*) 'Recognized College' means any college within the University area providing courses of study for the Pre-University Examination of the University".

I am anxious, Sir, that the Pre-University colleges should form a class apart from those coming under the Oriental Title Colleges.

MR. CHAIRMAN : The hon. Member may speak on the amendment after all the amendments to this clause are moved and duly seconded.

SRI S. K. SAMBANDHAN : I second the amendments, Sir.

SRI R. VENKATACHALAM : Sir, I move the amendment standing in the name of the hon. Member Sri N. V. Natarajan, namely :—

For the existing item (*k*), *substitute* the following :—

" (*k*) Registered graduate or Diploma-holders in Tamil means a graduate or Diploma-holder in Tamil registered under this Act".

10th November 1965]

SRI K. ANBAZHAGAN : I second the amendment, Sir.

THE HON. SRI R. VENKATARAMAN : There may be a clarification on the point of procedure. Where an amendment stands in the name of one member, another member cannot move the amendment. If members have jointly given notice of the amendment, then as one of the authors of the amendment, any one of those who have given notice can move the amendment. The hon. Member who just moved the amendment said he was moving the amendment standing in the name of another member.

MR. CHAIRMAN : With my permission

THE HON. SRI R. VENKATARAMAN : The Chairman's permission cannot cure certain things considered to be the duty and right of certain other members. So far as questions are concerned, with the permission of the Chair, they can be put by other members. But so far as resolutions and amendments are concerned, the member has to be present and move the resolution or amendment.

SRI K. BALASUBRAMANYA AYYAR : Sir, I may inform the Chairman that some time ago, I gave notice of a number of amendments and I was not here to move them, and, therefore, they were all struck down.

MR. CHAIRMAN : Then, we shall follow that precedent. It won't be in order for the hon. Member Sri Venkatachalam to move the amendment given notice of by the hon. Member Sri N. V. Natarajan. The amendment would be deemed to have been not moved as the hon. Member is not in his place.

Now the amendments moved by hon. Members Sri Rajah Iyer and Dr. Chidambaranathan are before the House for discussion.

*DR. A. CHIDAMBARANATHAN : Mr. Chairman, Sir, by my amendment I want that the colleges which give instruction leading to the award of titles, diplomas, etc., such as Pulavar, Vidwan, Siromani, Sangeetha Bushan, Sastri and so on should be clubbed with affiliated colleges and not with the approved colleges. There should not be any infrading attached to the Oriental Title Colleges because of their being clubbed with approved colleges. In fact the original Bill as was presented before the House did not contain this disparaging idea. In the course of the deliberations in the Joint Select Committee, the hon. the Leader of the House actually said that he was in favour of having all these Oriental Colleges in existence as affiliated colleges. On page 64 of the Report it is stated : 'The Hon. Sri R. Venkataraman expressed the view that they might have only one category of colleges, namely, affiliated colleges, that such of those Oriental Colleges in existence might be deemed to be affiliated colleges of the Madras University and that there would be no approved

[Dr. A. Chidambaranathan] [10th November 1965

colleges But incidentally some time later the idea of the approved colleges came in and approved colleges were contemplated only in relation to title and diploma colleges.

SRI K. BALASUBRAMANYA AYYAR : Sir, the Hon. Sri R. Venkataraman as a member of the Committee gave a paper in which he stated alternatively that they might have the approved colleges also. It was not incidental but simultaneous.

DR. A. CHIDAMBARANATHAN : Originally it was intended that all colleges including the oriental colleges should come under affiliated colleges. That was at one stage and during the course of the deliberations of the Joint Select Committee.

SRI K. BALASUBRAMANYA AYYAR : It was only an idea.

DR. A. CHIDAMBARANATHAN : Yes, But at another stage the idea of the approved colleges was mooted and within that ambit it was proposed to include colleges leading to titles, diplomas and so on. Later on when a member of the Committee put the question with regard to the P.U.C. colleges, the reply came that they would be put under approved colleges. The position was to find a place for the Pre-University colleges. Instead of treating them as affiliated colleges they had been conferred the privilege of being clubbed with the oriental colleges. The others were therefore called the affiliated colleges. I would have absolutely no objection if these oriental colleges alone were classed as approved colleges. That is my point, Sir.

SRI M. RAJAH IYER : Sir, I am anxious that the Pre-University colleges must not continue to exist as pre-University colleges. There is a large section of opinion among the educationists that these Pre-University classes should rightly belong to the high school stage. But we in Madras continue to have it under the control of the University. (An hon. Member: The high schools refused to take them). For various reasons I for one feel that the Pre-University course should rightly be under the control of the University. But the moment they start opening the 1st year B.A. or B.Sc. they become affiliated colleges. It is only a question of recognising the existence of these colleges and we may as well call them recognised colleges and not club them with the approved Oriental colleges which have representation on the Senate and the Academic Council. Supposing the Principal of the approved college, which is only a pre-University college gets elected to the Senate and the Academic Council by virtue of being the Principal, the moment he starts the B.A. or B.Sc. course, he ceases to be the Principal of an approved college and that will lead to a vacancy and then election and so on. These three seats should rightly go to the Oriental Colleges. I do not want these seats intended for these Oriental Colleges to be taken away by the Pre-University Colleges. Therefore I suggest that the term ' approved college ' should be confined only to the colleges awarding diplomas and titles in various subjects.

10th November 1965] [Sri M. Rajah Iyer]

That is so far as my amendment to clause 2 (*b*) is concerned. With regard to the insertion of the new sub-clause (*jj*) those recognised colleges will be distinct from the other colleges and they will not come under any of the clauses of the Bill.

* திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இங்கு தரப்பட்டிருக்கும் திருத்தத்தின் பொது நோக்கம் விளங்குகிறது என்றாலும் சிலவற்றை நான் தெரிவிக்க விரும்புகிறேன். டாக்டர் சிதம்பரநாதன் அவர்கள் பெயரில் உள்ள திருத்தப்படி, கல்லூரிகளில் பட்டம் பெறுகிற மாணவர்கள் நேரடியாகவே பல்கலைக்கழகத்தில் தங்களுடைய பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் வாய்ப்புப் பெற்றவர்களாக இருக்கிறார்கள். ஓரியண்டல் காலேஜ் முதலான கல்லூரிகளில் வித்வான்களாக தமிழ் அல்லது சமஸ்கிருத கல்லூரிகளில் படித்து வெளிவரும் புலவர்கள் தங்கள் சார்பாக யாரையும் தேர்ந்தெடுத்து பல்கலைக்கழகத்துக்கு அனுப்பும் உரிமை பெறவில்லை. டாக்டர் சிதம்பரநாதன் அவர்கள் பெயரில் உள்ள அந்தத் திருத்தப்படி அக் கல்லூரிகளும் ஒரு தனித் தகுதி உடையதாக வேண்டும். அப்ரூவ்டு காலேஜ் என்ற பெயரில் பி.யூ.சி. கல்லூரியும் புலவர் கல்லூரியும் இணைந்துள்ள காரணத்தால் நாளைக்குத் தகுதி பெறலாம் என்று கருதப்படுகிற தமிழ்க் கல்லூரிகள் பாதிக்கப்படுகின்றன. பட்டப் படிப்புள்ள கல்லூரி தவிர, தகுதி பெற முடியாத நிலையிலிருக்கும் பி.யூ.சி. கல்லூரியும் அப்ரூவ்டு காலேஜ் பட்டியலில் இருப்பதால் அவற்றைப் பிரித்துக் காட்டும் பெயர் வேண்டப்படுகிறது. அதனால் தான் தனித்து பெயரிட்டு வழங்கப்பட வேண்டுமென்று திரு. ராஜா அய்யர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. அதனுடைய நோக்கம் இன்றைய தினம் பட்டதாரிகள் பெறும் சிறப்பை நாளைக்கு வித்வான்கள் பெறவேண்டுமென்று விரும்புகிறோம். அது எதிர்காலத்தில் பல்கலைக்கழகத்தால் கவனிக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இருந்தாலும் அந்தக் குழுவில் இடம் பெறுகிறவர்களில் இப்படிப் பட்ட தகுதி உள்ளவர்கள் சிலர் இடம்பெற்றாக வேண்டும். ஓரியண்டல் காலேஜ் என்ற பெயரிட்டு அப்ரூவ்டு காலேஜாக வரும்போது டிப்ளோமா தகுதி பெறுகிறவர்கள், கல்லூரி ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு தனித்து அவர்களுக்கே வழங்கப்பட வேண்டும். அதில் பி.யு.சி. நடக்கும் கல்லூரிக்கும் இன்று இடம் இருக்கிறது. அது தவிர்க்கப்பட வேண்டும். வித்வான்கள் பட்டதாரிகளுக்குச் சமமாகும் வகையில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்ற கருத்தை சட்டசபையில் நிறைவேற்ற முடியாது, பல்கலைக்கழகம் தான் அதைப் பரிசீலிக்க வேண்டுமென்றாலும், பட்டதாரிகள் பிரதிநிதிகள் ஐந்து பேர் ஆட்சி மன்றத்திற்கு வரும்போது பல்வேறு டிப்ளமா பெற்றவரிலிருந்தும் ஐந்து பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு அக்காடமிக் கவுன்சிலுக்கு வரவேண்டுமென்ற கருத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டால் இத் திருத்தத்தின் நோக்கம் நிறைவேறும். எதிர்காலத்தில் பட்டதாரிகளுக்குச் சமமாக வித்வான்கள் மதிக்கப்பட வேண்டுமென்ற சூழ்நிலையில் வித்வான்கள் சார்பில் சிலர் இடம் பெற வேண்டுமானால் இரு வகை கல்லூரிகளும் பிரித்து அறியப்பட்டால் தான் நல்லது. அங்கத்தினர் திரு. ராஜா அய்யர் அவர்கள் சொல்லியது 4-20 p.m.

போல ரிகக்னைஸ்டு காலேஜு என்றும் அப்ரூவ்டு காலேஜு என்றும் வேற்றுமை இருந்தால் தான் அப்ரூவ்டு காலேஜ் பெயரில் உள்ள ஓரியண்டல் காலேஜுகள் தங்கள் உரிமையைப் பெற முடியும். புலவர்கள் உரிமைகள் பாதிக்கப்படாமல் காக்க முடியும். ஆகையால் இத் திருத்தங்களை அருள் கூர்ந்து பரிசீலித்து இயன்ற அளவு ஏற்றுக்கொள்ளவேண்டும்.

*கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதைப் பொறுத்தவரையில் பட்டதாரிகள் ஒரு வகை. டிப்ளமா பெறுகிறவர்கள் ஒருவகை. அந்த வகையில் Affiliated College என்றும், Approved College என்றும் வந்தன. டிப்ளோமா பெறுகிறவர்களுக்கு பட்டதாரிகளுடைய அந்தஸ்து இந்த மசோதாவில் அளிக்கப் படவில்லை. இந்த அடிப்படையில்தான் பட்டதாரிகளைத் தயாரிக்கும் காலேஜ்கள் Affiliated Colleges என்றும், டிப்ளோமா பெறுகிறவர்களைத் தயாரிக்கும் காலேஜ் Approved Colleges என்றும் வந்தன. பி.யு.சி. மாத்திரம் சொல்லிக்கொடுப்பதில்லை; பி.யு;சி; யாகவே எப்போதும் இருக்காது. பி.யு.சி. முன்னால் வருகிறது; பின்னால் பட்டதாரிகளைத் தயாரிக்கும் வேலையை ஏற்றுக் கொள்ளும் முன்பு recognition வேண்டுமென்ற ஒரு கருத்து இருக்கிறது. பி.யு.சி. மாணவர்களைத் தயாரிக்கிறவர்களுக்கும், டிப்ளோமா பெறுகிறவர்களைத் தயாரிப்பவர்களுக்கும், recogniced college என்று இருக்கிறது. கனம் திரு. ராஜா அய்யர் அவர்கள் திருத்தம் இன்னொரு category வைத்து அதை Recognived College என்று கொடுக்கலாம் என்பது. பி.யு.சி படிப்பை உயர்நிலைப் பள்ளிகளில் சேர்க்க முடியாது, சேர்ப்ப தில்லை என்பது தமிழ் நாட்டில் உள்ள கருத்து. அது கல்லூரிகளில் இருப்பதுதான் நல்லது. இன்னும் ஒரு அபிப்பிராயம் சொல்லப்படுகிறது. கனம் வைஸ்சான்சலருக்கும், திரு. பால சுப்பிரமணிய அய்யர் அவர்களுக்கும் தெரிந்திருக்கும். கல்லூரிகளை நடத்தும்போது அதிலுள்ள பி.யு.சியை எடுத்துவிட்டால் அவர் களுக்கு நிதி நிலைமையைச் சமாளிக்கமுடியவில்லை. கல்லூரிக்கு யாராவது பணம் கொடுக்கவேண்டும். பி.யு.சி. வைத்தபிறகு, பாதி பேர் அதிலிருந்து வருகிற வருமானத்தை வைத்துத்தான் கல்லூரி களை நடத்துகிறார்கள். பி.யு.சி. யைத் தனியாக பிரித்துவிடுவது என்பதில்லை. பி.யு.சி. தனியாக இருக்காது; முதலில் பி.யு;சி;க்குத் தான் recognition கொடுக்கிறார்கள். பக்குவம் அடைந்த பிறகு மற்ற பட்டங்களுக்குக் கொடுக்கிறார்கள். ஆகையால் பி.யு.சி. என்பது தற்காலிகம்தான். ஆகையால் இதை ஒரு Recognized College என்று வைக்க அவசியமில்லை என்று கருதுகிறேன். யுனிவர்சிடி recognise செய்கிற காலேஜ் இருக்கிறது. அதோடு டிப்ளோமா பெறுகிறவர் களைத் தயாரிக்கும் கல்லூரிகளும் வருகின்றன. நான் முன்பே கூறியதுபோல பல்கலைக்கழகம்தான் இதைப் பரிசீலனை செய்யவேண்டும். இதில் எவ்வளவுதூரம் பட்ட தாரிகளாக்கலாம் என்பதும், அவர்களைத் தயாரிக்கிற கல்லூரியை ஓரியண்டல் கல்லூரியாக வைப்பதும் தனியாக இந்தச் சட்டத்தின் கீழ் வருகிறது. சில டிப்ளோமா பெறுகிறவர்களைப் பட்டதாரி

10th November 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

களாக்குவது சரியல்ல என்று பல்கலைக்கழகம் அபிப்பிராயப் படலாம். அப்படிப்பட்டவர்களை பட்டதாரிகளை தயாரிக்காமல் இருந்தும் அவர்கள் படிக்கிற காலேஜ் தனிக் கல்லூரியாக இருக்கும். ஆகையால்தான் பிரைவேட் கல்லூரி என்றால் அது தற்காலிகமாக இருப்பது. பி.யு.சி. கல்லூரி பட்டதாரிகள் இல்லாத கல்லூரி யாக அப்ரூவ்டு காலேஜ் என்ற கருத்தும் நன்கு ஆராய்ந்து பொறுக்குக்குழுவில் பரிசீலித்துத்தான் வைத்திருக்கிறார்கள். யார் பட்டதாரிகள் என்று பல்கலைக்கழகம் பின்னால் முடிவு செய்ய முடியும். ஆகையால் இந்தத் திருத்தத்திற்கு அவசியமில்லை என்று நினைக்கிறேன்.

திரு. க. அன்பழகன்: இதிலே அகாடமிக் கவுன்சிலுக்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினருக்கு வரும் விளக்கத்தில், Two members elected by the Principals of approved Colleges including Principals and Physical Directors but excluding tutors. என்ற விதி Clause (2) (b)- -ல் வருகிறது. அதிலே இரண்டு பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சொல்லுகிறபொழுது நான் எண்ணுவது approved என்பதில் oriental கல்லூரி, பி.யு.சி. கல்லூரி ஆகிய இரண்டுக்கும் இடம் கொடுக்கப்படுவது காணலாம். திரு. இராஜா அய்யர் திருத்தப்படி ஓரியண்டல் கல்லூரியிலிருந்து பிரிந்து வரவேண்டுமென்றால் P.U.C. கல்லூரி விலக்க வாய்ப்பிருக்கிறது. அதனால்தான் P.U.C. கல்லூரிக்கு Approved College என்று பெயர் கூடாதென்று தெரிவிக்கிறார்கள். அமைச்சரவர்கள் அந்த இடம் இரண்டும் புலவர் கல்லூரிகளுக்கு என்று எண்ணியே பொதுக்குழுவில் இசைந்த காரணத்தால் அந்தப்பாதுகாப்பை எப்படி கொடுப்பார்களாயினும், அதை ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: Approved College elect பண்ணுவது இருக்கிறதே இதை ரூல்ஸ் பிரேம்பண்ணும் பொழுது கவனிக்கலாம்.

The amendments were by leave, withdrawn.

Clause 2 was put and carried.

Clause 3 was put and carried.

Clause 4.

MR. CHAIRMAN : The motion is—

'That clause 4 do stand part of the Bill'.

DR. A. CHIDAMBARANATHAN : Sir, I move the following amendment :—

"In sub-clause (8) of clause 4 *for* the words 'diplomas and Pre-University Examination' *substitute* the words 'diplomas and the Pre-University Examination.''

SRI S. K. SAMBANDHAN : I second the amendment, Sir.

[10th November 1965

DR. A. CHIDAMBARANATHAN : Sir, this is purely a verbal amendment intended for the purpose of putting in correct English. The sub-clause reads—

'(8) to approve colleges providing courses of study for admission to the examinations for titles and diplomas and Pre-University examination of the University under conditions prescribed and to withdraw such approval; '

This amendment is purely a verbal one.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is there already in the Bill.

DR. A. CHIDAMBARANATHAN : It is not in my copy of the Bill.

THE HON. SRI R. VENKATARAMAN : If it is a printer's error, it can be set right.

DR. A. CHIDAMBARANATHAN : If it is so, it is all right.

SRI K. BALASUBRAMANYA AYYAR : It is there in the Bill.

DR. A. CHIDAMBARANATHAN : If it is there, it is all right. My purpose is served. I withdraw my amendment.

The amendment was, by leave, withdrawn.

Clause 4 was put and carried.

New Clause 4-A.

DR. A. CHIDAMBARANATHAN : Sir, I move the following
4-30 p.m. amendment :—

"*After* Clause 4, the following new Clause 4-A be added—

'4-A. No person shall be excluded from membership of any of the authorities of the University or from admission to any degree or course of study on the ground of political belief and it shall not be lawful for the University to adopt or impose on any person any test whatsoever relating to religious or political belief or profession in order to entitle him to be admitted thereto as a student or to hold any office or appointment therein or to graduate thereat or to enjoy or exercise any privilege thereof ".

SRI S. K. SAMBANDHAN : I second the amendment, Sir.

DR. A. CHIDAMBARANATHAN : Sir, under the Constitution, of course, there is sufficient safeguard against discrimination on the sole ground of caste, creed, colour, sex, etc., but not for political belief. So the fundamental rights cover only discrimination on the sole ground of sex, caste, creed, colour, etc. This new Clause 4-A is merely a reproduction of section 5 of the Madras University Act removing that part which concerns caste, creed, colour, sex, etc. That part has been omitted here. Anybody

10th November 1965] [Dr. A. Chidambaranathan]

who holds a political belief should not be tabooed for admission to any course of study in the University. Inclusion of political belief is in line with the Madras University Act. It has a salutary effect. That part of the section dealing with sex, creed, colour, etc., I have carefully omitted in the proposed amendment. My amendment reads—

" After Clause 4, the following new Clause 4-A be added—

'4-A. No person shall be excluded from membership of any of the authorities of the University or from admission to any degree or course of study on the ground of political belief and it shall not be lawful for the University to adopt or impose on any person any test whatsoever relating to religious or political belief or profession in order to entitle him to be admitted thereto as a student or to hold any office or appointment therein or to graduate thereat or to enjoy or exercise any privilege thereof ".

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I am not prepared to go any further than our Constitution Political belief may be anything. It may even be treachery. There is no limit to it. But, I am not prepared to argue. When once the Constitution provides for ample safeguards, I am not prepared to go beyond the Constitution. So, I am not prepared to accept the amendment.

The amendment was, by leave, withdrawn.

Clauses 5 and 6 were put and carried.

Clause 7.

MR. CHAIRMAN : The motion is—

'That Clause 7 do stand part of the Bill '.

* DR. A. CHIDAMBARANATHAN : Sir, I move the following amendment :—

" In sub-clause (4) of Clause 7, the last sentence be deleted ".

SRI S. K. SAMBANDHAN : I second the amendment, Sir.

DR. A. CHIDAMBARANATHAN : Sir, only when an extraordinary situation arises, a committee of enquiry or inspection might be instituted by the Government. On the basis of the report received from that body, it is open to the Government to call for anything from the Senate or the Syndicate and normally the Senate or the Syndicate would never fail to respond to the wishes of the Government. No extraordinary situation so far has developed in our State either in the Madras University or in the Annamalai University to justify the inclusion of the last sentence which reads as follows :—

" In the event of the Senate or the Syndicate or both not complying with such directions within such time as may be fixed in that behalf by the Government, the Government shall have

power to appoint any person or body to comply with such directions and make such orders as may be necessary for the expenses thereof ".

There is no such provision in the Madras University Act. I know how cordial relations have been established between the present Chief Minister and our esteemed Vice-Chancellor. Let us not do anything to mar such cordial relations. That is what I propose.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There cannot possibly be any objection, Sir, to the provision made in the clause. If it has been put in the clause, it does not mean that there should be any misunderstanding between the Government and the University. In the Madras University Act, there is no such provision. But anyhow if there is this provision in this Bill, it does not mean that there should be new conflicts developed as between the University and the Government. This provision only provides for a contingency. If a contingency should arise, and if the University obstructs and closes the door, should we not pass a special legislation then ? To meet that contingency, there is this provision. It is a general provision. There cannot possibly be any objection to this.

The amendment was, by leave, withdrawn.

Clause 7 was put and carried.

Clauses 8 to 10 were put and carried.

Clause **11.**

MR. CHAIRMAN : The motion is—

'That Clause 11 do stand part of the Bill'.

*DR. A. CHIDAMBARANATHAN : Sir, I move the following amendment :—

"In sub-clause (3) of the Clause 11, *delete* the words 'for not more than two successive terms.".

SRI S. K. SAMBANDHAN : I second the amendment, Sir.

DR. A. CHIDAMBARANATHAN : Sir, the purpose of my amendment is to enable persons who are ripe in experience and who are thoroughly deserving and competent to hold that office for a continuously long time and to occupy that post and serve the University for such periods as the committees of selection might desire and until they are willing to contribute their services. In fact, outside India, in a place like Edinburgh, Oxford, Cambridge and other Universities, the question is sometimes asked when we visit those places, 'Are you coming from Dr. Mudaliar's University ?' instead of the Madras University. So, by his connection for a long time with the Madras University and by his association with the Madras University as its Vice-Chancellor for a continuously long period, his name has become so familiar there, just as

10th November 1965] [Dr. A. Chidambaranathan]

ten or fifteen years ago, whenever anybody from India went outside India, he was asked, "Are you coming from Gandhiji's country ?" In that way, questions were asked before. Likewise, when I was in Durham and Cambridge, the Vice-Chancellors of those Universities put me this question, "Are you not coming from Dr. Mudaliar's University?". It is because of the standards which vie with the standards of the Universities of Great Britain, which he has been cautious enough to proclaim and protect, that he is held in such high esteem. All that has been possible because of his continued long service to the University of Madras. Supposing he had not been there for this continuous period of so many terms, the progress and development which the University has achieved in so many years, which is the envy of many of the other Universities in India, could not have taken place. Likewise, Sir, it may be possible for the Government to get a person like him and a personality of his stature, who will be prepared to give his continued service for more than two successive terms. If there is any one like that, why should we prevent that person from being continued for a longer period than two terms, Sir ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I have referred to this while replying to the general debate. After all, the Select Committee did consider all aspects and they had taken this decision, and I shall not depart from it. Therefore, I would request the hon. Member not to press his amendment.

The amendment was, by leave, withdrawn.

Clause 11 was put and carried.

Clauses 12 and 13 were put and carried.

Clause 14.

DR. A. CHIDAMBARANATHAN : Sir, in deference to the Chief Minister's speech, I am not moving the amendment. 4-40 p.m.

Clause 14 was put and carried.

Clause 15.

MR. CHAIRMAN : The motion is—

"That clause 15 do stand part of the Bill."

SRI M. RAJAH IYER : Sir, I move the following amendments :—

"In item (8) under the heading Class I, the following words be *deleted* :—

'who have served as Principals for not less than three years'."

" *After* item (7) under the heading Class III, the following new item (8) be *added* :—

'(8) Every association or person making an annual contribution of not less than rupees 5,000 for the general purposes of the University shall be entitled to nominate one member who shall be a member so long as the annual contribution continues.' "

The amendments were duly seconded.

* DR. A. CHIDAMBARANATHAN : Sir, I move the following amendments :—

" In clause 15, Class III, in item (1) *for* the word ' Fifteen ', the word ' Twenty ' be *substituted.*"

" *After* item (1), the following item (1-A) be *added* :—

(1-A) ' Five members elected by the title holders and diploma holders from among themselves in accordance with the system of proportional representation by means of the single transferable vote '.

" *After* item (4), the following new item (4-A) be *added* :—

(4-A) ' Five members elected by the Principals of Post-Graduate Colleges and Professional Colleges '."

The amendments were duly seconded.

SRI N. V. NATARAJAN : Sir, I move the following amendment :—

" For item (3) under the heading Class III, *substitute* the following :—

'(3) Four members elected by the members of the Legislative Assembly of the State of Madras from among themselves according to the principle of proportional representation by means of the single transferable vote, and two members elected by the members of the Legislative Council of that State from among themselves according to the same principle. "

SRI R. VENKATACHALAM : I second the amendment, Sir.

* SRI M. RAJAH IYER : Sir, after going through the report of the Joint Select Committee, I am conscious of the fact that the two amendments moved by me, if accepted, will go contrary to the spirit behind the restrictions placed. In order to make the Academic Council a compact body rather than an unwieldy body, the learned Joint Select Committee thought of restrictions like this, namely, that persons who have served as Principals for not less than three years alone should be there.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I would like to point out to the hon. Member that this restriction of three years was placed for Principals who might have served anywhere in any University as Principal. All that will be taken into account.

10th November 1965]

SRI M. RAJAH IYER : What I am anxious to point out is this. There may be persons who have served for a number of years. They might have been in any University body, in the Academic Council, not by virtue of their being principals of institutions but because they have been educationists. Today when they become principals, even though they have just one or two years' experience as Principal and a number of years' experience as Professor, we might think of giving them an opportunity to sit in the Senate and Academic Council ex-officio. I am anxious to say that if the membership should be restricted, it could be done in a number of other ways.

I have moved the next amendment in the pious hope that it would add to the finances of the Universities through increasing the number of members of the Senate. We may encourage those who donate Rs. 5,000 per annum to become members of the Senate. It may not be possible for me to find Rs. 50,000 straightway. For example, there are educational trusts, Chambers of Commerce, limited concerns and commercial firms. The Board of Directors may not be in a position to find Rs. 50,000 straightway. But as long as they pay Rs. 5,000 not for one year, not for ten years, but for a number of years, why should we not just give them a seat and add to the number of Senators ? It may not be a compact body, but this sort of unwieldiness should be welcomed, I hope, because it would mean more resources to the University.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the Joint Select Committee considered a suggestion to reduce the amount to Rs. 25,000 but it was not accepted. There was a very serious suggestion to raise it to Rs. 1 lakh. Now, if the hon. Member's suggestion is accepted, payment of Rs. 5,000 for a year would entitle the donor to be a member for that year. That would lead to abuse. If there is canvassing or party politics, some ten members may be canvassed for a particular year. By paying Rs. 50,000, one would get ten votes. That would lead to abuse. That is why I am unable to accept the amendments.

DR. A. CHIDAMBARANATHAN : Sir, the substitution of the word "twenty" for "fifteen" does not require any great argument. In the Madras University there is the provision that thirty should be returned from the Registered Graduates' Constituency. This covers one-third of the area of the Madras University. Twenty might be a very good number.

With regard to the other amendments about "five members elected by the Principals of Post-Graduate Colleges and Professional Colleges", this is a long-range view. We are not going to tamper with the University Act now and then. We have to think of the future of the University. Actually though there may not be many Post-Graduate Colleges in the Madurai University

[Dr. A. Chidambaranathan] [10th November 1965

area now, in the long run we could foresee a large number of Post-Graduate colleges coming up, and we may just make provision for some representation for the Principals of those Post-Graduate colleges. There are already seven training colleges. There is a Medical College at Madurai and another at Tirunelveli. Other Colleges may come into existence in course of time. So, I propose that five members may be elected by the Principals of Post-Graduate Colleges and Professional Colleges.

With regard to the other amendment, I have already stated my views.

* **திரு. என். வி. நடராசன்** : தலைவர் அவர்களே, நான்கு உறுப்பினர்களை சட்டமன்றத்திலிருந்தும் இரண்டு உறுப்பினர்களை சட்ட மன்ற மேலவையிலிருந்தும் தேர்ந்தெடுக்கும் முறையை Proportional ஓட்டு முறையில் வைத்தால்தான் பரவலாக எதிர்கட்சிகளும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அது துணையாக இருக்கும். சட்ட மன்றத்தில் அந்த முறையைப் பின்பற்றி வருவதால் மதுரைப் பல்கலைக் கழகத்தில் இந்தத் தேர்தெடுக்கும் முறையை அதாவது Proportional ஓட்டு முறையில் தேர்ந்தெடுப்பதை வைத்து மற்றவர்களுக்கும் ஜனநாயக அடிப்படையில் சந்தர்ப்பம் அளிக்க வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. க. அன்பழகன்** : தலைவர் அவர்களே, தரப்பட்டிருக்கிற திருத்தத்தை ஒட்டி மூன்றாண்டுகள் பிரின்சுபாலாக இல்லாதவர்கள் இடம்பெற முடியாததால் ஏற்படும் நிலையை விளக்க விரும்புகிறேன். மூன்றாண்டுகள் பிரின்சுபாலாக இல்லாமல் நீண்ட காலம் ஆசிரியராக இருந்திருந்தால் அவராவது வருவதற்கு வழி வைத்தால் தான் கல்லூரிகளின் சார்பில் ஒருவராவது வருவதற்கு வழி ஏற்படும். இல்லாவிட்டால் ஆசிரியர்களும் பேராசிரியர்களும் வர முடியாத நிலையில் நாமினேஷனில் இடம் கிடைப்பது கடினம். வேறு கல்லூரிகளில் பேராசிரியராக இருந்திருந்தாலும் அவருக்கும் இடம் கிடைக்காத நிலை இப்போது இருக்கிறது. வேறு வாய்ப்பு இருந்தால் வரலாமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வேறு வாய்ப்பு இல்லை. கல்லூரிக்கு என ஒரு இடம் அளிக்கப்பட்டால் கல்லூரி முதல்வராக மூன்றாண்டுகள் ஆகாவிட்டாலும் கல்லூரி ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்படுவார்கள். இப்போது அதற்கு வாய்ப்பு இல்லாததால் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து ஒரு கல்லூரியில் முதல்வராக இல்லாதவர்களும் பல ஆண்டுகள் பேராசிரியராக இருந்தவரானால் அவர் இடம் பெறலாமென்ற விதி விலக்கு அளித்தால் நல்லது.

மற்றொன்று; டாக்டர் சிதம்பரநாதன் அவர்கள் தெரிவித்தார்கள், அதில் உள்ள முக்கிய கருத்து, பல்வேறு துறையினர் இடம் பெறுவதுபோல் டிப்ளமா பெறுகிறவர்கள் பட்டதாரிகளுக்குச் சமமாக இடம் பெறாவிட்டாலும் ஓரளவு இடம் பெற முடியும். பஞ்சாயத்து தலைவர் ஒருவர் வெற்றிபெற்று இடம் பெறுகிறார் என்றாலும் அவர் பட்டதாரிக்குச் சமம் ஆகிவிட்

10th November 1965] [திரு. க. அன்பழகன்]

மாட்டார். குழு உறுப்பினர் என்ற முறையில் கடமையைச் செய்வார். பட்டதாரி உரிமையை அவர் எடுத்துக்கொள்ள மாட்டார். அதேபோன்று வித்வான், சிரோமணி பட்டம் பெற்ற வர்களிடமிருந்து ஐந்து அல்லது ஆறு பேர்கள் வருவதற்கு இட மளித்தால் அந்தப் பட்டியலில் சேருகிற சிரோமணி முதலியவர்கள் சேர்ந்து சிலரை அனுப்ப வாய்ப்பு அளிக்கும். ஆகையால் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். சட்டசபையில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுவதுபோல் விகிதாசார per cent ஓட்டு முறை வைத்து தேர்ந்தெடுக்கப்பட்டால் பொதுவாக ஒருவிதமான ஜனநாயக உணர்ச்சிக்கு வலிவு ஏற்படும். தேர்தல் முறையில் single transferable vote முறையில் வருவது குற்றமுள்ள முறை அல்ல. அப்படியிருப்பதால்தான் சட்ட சபைக்கு அந்த முறை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகையால் மேல் சபை யான இந்த மன்றத்திலும் அந்த முறையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஸெனெட்டிற்கு இந்த பிரதி நிதித்துவம் இருப்பது, தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஓட்டு முறை இதெல்லாம் பொறுக்குக் கமிட்டியில் விரிவாக விவாதிக்கப்பட்டு பின்னுல் ஏகமனதாக இந்த முடிவுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. single transferable ஓட்டு முறை பற்றி நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது. கனம் அங்கத்தினர் கவனித்திருப்பார். ரிபோர்டில் கூட நான் முடிவு சொன்னேன். எனக்கு இதிலே கூடாதென்று அபிப்ராயம் ஒன்றுமில்லை. ஆனல், எல்லா விஷயங் களும் ஆராயப்பட்டு, யோசிக்கப்பட்டு, விவாதம் செய்யப்பட்டு, இப்பொழுது சென்னை பல்கலைக்கழகத்தில் என்ன முறை இருக் கிறதோ அதே முறை அளிக்கப்படவேண்டுமென்று இப்பொழுது முடிவாகி இருக்கிறது. எல்லோரும் விவாதித்து, இதில் கருத் துக்கள் தெரிவிக்கப்பட்டு, அதற்கப்புறம் இந்த முடிவு ஏற்பட்டிருக்கிறதென்றல், அதை மாற்றக்கூடிய ஒரு தீர்மானத்தை நான் ஆதரிக்கத் தேவையில்லையென்று தெரிவிக்கிறேன். அந்தப் பொறுக்குக் கமிட்டியில் கருத்து தரப்பட்டது. இப்பொழு தெல்லாம் கட்சி ரீதியாக நடக்கிறது. பல கட்சிகள் இருக்கின்றன. அதைக்காட்டி, ஓட்டு முறை இல்லையென்றலும், எதிர்க்கட்சிக்குக் கொடுக்கிறர்கள். எங்களுக்கு ஓட்டு மெஜாரிடி இருக்கிறது என்று அல்ல. இந்த மன்றத்தில் நடப்பது கனம் அங்கத்தினருக்குத் தெரியும். இப்பொழுதுகூட ஸெனட்டில் இரண்டு ஸ்தானம் வந்தது. ஒன்றுக்கு ராஜா ஐயர் நியமிக்கப்படுகிறர். அவர் இந்தக் கட்சி இல்லை. ஸ்ரீ கே. பாலசுப்ரமண்ய ஐயரும் வந்தார்கள். ஆகையால் இந்த முறையை மாற்றவேண்டியதில்லை என்று சொல்ல விரும்புகிறேன். 15-ஐ 20-ஆக ஆக்குவதும், யார் யாருக்குப் பிரதிநிதித்துவம் கொடுப்பது என்பதும் நன்ருக ஆராயப்பட்டது. இப்பொழுது டிப்ளமா ஹோல்டருக்கு பிரதிநிதித்துவம் சரியாக இல்லை. மூன்று ஆண்டுகளாக மெம்பராக இல்லையென்றல். அவர் கள் ex-officio மெம்பராக இருப்பார்கள். நான் உணர்ந்ததை சொல்லுகிறேன். இந்த வைஸ் சான்ஸலர் அதை எல்லாம் அங்கீகரிப்பார்களென்று நம்புகிறேன். காலேஜிலிருந்து பிரதி 4-50 p.m.

நிதித்துவம் ஸெனட்டில் இல்லை என்பதற்காக எந்தக் காலேஜும் பாதிக்கப்படவில்லை. இதுவரை இருக்கிறது என்று சொல்ல முடியாது. காலேஜில் பிரின்சிபால் எல்லாம் ex-officio என்று சொல்லலாம். இருந்தும் என்ன செய்கிறார்கள்? இவர் இல்லையென்றால் காலேஜ் பாதிக்கப்படுமா? காலேஜ் வேலைகளை கவனிக்க முடியாதா? இதனால் கிளர்ச்சியும் விபரீதமும் வருமென்று நினைக்க முடியாது. அதற்காகத்தான் nomination வைத்திருக்கிறது. Nomination Diploma holders களுக்கு வேண்டியதுதான். அதை நான் ஆதரிக்கிறேன். இந்த மதுரை காலேஜில் பிரதிநிதித்துவம் இல்லை. காலேஜ் பிரின்ஸிபாலை ஆக்டிங் மெம்பராகப் போடுகிறோம். ஆறு மாதத்தில் revert ஆகும். உடனே ஆறு மாதத்தில் ஒரு மீடிங் வேண்டும். ஒருவர் தள்ளி வையுங்கள் என்று சொல்லுவார். அதற்காகத்தான் வரம்பு. ஒரே பொறுக்கு கமிட்டியில் இதை வைத்திருக்கிறது. இருந்தாலும் காலேஜில் பிரதிநிதித்துவம் வேண்டுமென்றால், Oriental Diploma holders தயாரிக்கும் கல்லூரிக்கும் நியமனம் வைத்து எல்லாவற்றையும் ஆராய்ந்து ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதால் இந்தத் திருத்தங்களை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று சொல்லுகிறேன்.

The amendments of Sri M. Rajah Iyer were, by leave, withdrawn.

DR. A. CHIDAMBARANATHAN : Sir, in view of the statement made by the Hon. the Chief Minister, I am not pressing my amendments.

The amendments were, by leave, withdrawn.

The amendment of Sri N. V. Natarajan was, by leave, withdrawn.

Clause 15 was put and carried.

Clauses 16 to 23 were put and carried.

Clause 24.

MR. CHAIRMAN : The motion is—

'That Clause 24 do stand part of the Bill.'

DR. A. CHIDAMBARANATHAN : Mr. Chairman, Sir, I move the following amendment :—

"In Clause 24 in item (7) of Class I, delete the words 'excluding training colleges'."

SRI S. K. SAMBANDHAN : I second the amendment, Sir.

SRI N. V. NATARAJAN : Mr. Chairman, Sir, I move the following amendment :—

